**தலைப்பு 236 – அரச கரும மொழிகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின், கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 236 – அரச கரும மொழிகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 05 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1<br>2.2(அ) |
| | | 2. | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப் படாமை | 2.2(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்படுகளுக்காக அதிகாரமளிப் பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கு அந்த அரசின் நிதியத்திலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | 1. பெறுகை செயற்பாடுகள் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள><br><br>2. பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் | 2.4.1<br><br>2.9 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச ஏனைய மேலதிக ஏற்பாடுகள் தமது திணைக்களத்தினால் கடை பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகள் வழங்குவதாகவும், | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை<br><br>2. இணக்கமின்மை | 2.13<br><br>2.14 |
| 128(1)(உ) | அரசுக்கு சொந்தமான அல்லது அரசின் பொறுப்பில் காணப்படும் பணம், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவானதும் மற்றும் முறையான ஏற்பாடுகள் மேற்கொள்வதாகவும் அவற்றை இடையிடையே மெய்மையாய்தல் செய்யப்படு வதாகவும், அவற்றை உரிய முறையில் தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளும் போது அவ்வாறு தீர்த்தல் செய்வதற்கு உரிய பிரமாணங்களுக்கு மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் எனவும்,- | சொத்துக்கள் முகாமைத் துவத்தின் குறைபாடுகள் | 2.5(அ)(i)(ii) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோகத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரச உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.11 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்கள் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் சிக்கனம், வினைத்திறமை, முறைசார் விதமாக மற்றும் நேர்மைத் தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக போதிய கவனத்துடனும் தனது திணைக்களத்தின் அலுவல்கள் மேற்கொள்வதெனவும் | சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.8 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமான நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டு கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும் | ஒதுக்கீட்டுக் கணக்கீட்டு கணக்கில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் | 2.10<br>2.12 |
| 128(1)(ங) | பிணை கட்டுவதற்கு ஆளாகியுள்ள உத்தியோகத்தர் கள் நடைமுறையிலுள்ள கட்டளைகளும் அறிவுறுத்தல் களுக்கும் இணங்க அவ்வாறு செய்கின்றன எனவும் | குறித்த உத்தியோகத்தர் களிடம் பிணை பெற்றுக் கொள்வதில் குறைபாடுகள் | 2.18 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர் களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர் பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர் கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | இழப்புகளும் சேதங்களும் | 2.7 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அத் திட்டத்தில் திணைக்களத்தினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 07 பிரதான செய்பணிகளில் 05 செய்பணிகள் மாத்திரம் உட்படுத்தி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 58 மில்லியன் ஆகும்.

### 2.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 05 பிரதான செய்பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த 17 கருமங்களில் ‘‘மொழிபெயர்பாளர்களுக்காக சிங்கள/ ஆங்கில கைநூலை தொகுத்து’’ வழங்கும் கருமம் மாத்திரம் நிறைவேற்றி இருக்காததுடன் அதற்காக ஒதுக்கிய ஏற்பாடுகள் ரூபா 0.200 மில்லியன் ஆக காணப்பட்டது.

(ii) கலைச் சொற்தொகுதி அடங்கிய இறுவெட்டு ஒன்று நிர்மாணித்தல் பிரதிகள் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய விடயங்களுக்காக ரூபா 279,750 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அந்த விடயம் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள 05 பிரதான செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 16 கருமங்களுக்காக ரூபா 34.77 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த 04 பிரதான செய்பணிகளில் 06 கருமங்கள் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை (Output) பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

## 2.3 நிலைபேறான அபிவிருத்தி

**நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் எல்லா அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் திணைக்களத்தில் நோக்கெல்லைக்கு நேரடியாக தொடர்புபடமாட்டாது என குறிப்பிட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் தூரநோக்கு, சேவைகள் மற்றும் முக்கிய கருமங்களை கவனத்தில் எடுத்த போது தொடர்புபடுத்தக் கூடிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் ஒன்றாகிய ''முழுமையான நியாயமான தரமான கல்வி ஒன்றினை சான்றுபடுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்க்கை பூராகவும் கல்விகற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்'' தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 2.4 பெறுகை செய்முறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

அரச கருமமொழிகள் திணைக்களத்தினால் அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 24.86 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 15.92 மில்லியன் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 8.94 மில்லியன் அதாவது ஒதுக்கிய ஏற்பாடுகளில் 56.12 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளது.

### 2.4.1 பெறுகை செய்முறையை செயற்படுத்துதல்

கூட்டுத்தொகை ரூபா 266,050 தொகைக்கான 03 பெறுகை அலுவல்கள் தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கைநூலின் வழிகாட்டல் 2.14.1 இன் பிரகாரம் தேவையான கூறுவிலை அழைக்காமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

**(i) வாகனப் பயன்பாடு**

அரச கரும திணைக்களத்தில் மீளாய்வாண்டு இறுதி அளவில் 03 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்கள் 36379 கிலோமீற்றர்கள் ஓடியிருந்தது. அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி ஆகியவற்றிற்காக ரூபா 231,542 தொகையும், வாகன சேவைக்காக ரூபா 87,910 தொகையும், வாகன திருத்த வேலைக்காக ரூபா 681,471 தொகையும், வாகன காப்புறுதிக்காக ரூபா 383,436 தொகையும் ஆக கூட்டுத்தொகை ரூபா 1,384,359 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் வாகனங்களை ஓட்டுவதற்காக சாரதி சம்பளங்கள் மற்றும் படிகள் தவிர ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 38.05 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(ii) எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்தல்**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை.

## 2.6 ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள்

03 செலவு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 40,277 இற்கான பொறுப்புக்கள் 2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 இலக்கங் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் பந்தி 2(இ) இன் படி ஒதுக்கம் இன்றி 2018 ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 இழப்புக்களும் சேதங்களும்

மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்கள் ஒருவரின் மற்றும் சாரதி ஒருவரின் கவனயீனத்தினால் ரூபா 48,782 தொகைக்கான மேசை கண்ணாடி இருப்பு ஒன்று உடைந்திருந்ததால் மற்றும் வான் வண்டியின் சாரதியின் கவனயீனத்தினல் விபத்து ஒன்று ஏற்பட்ட காரணத்தினால் ரூபா 68,409 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. கூட்டுத்தொகை ரூபா 117,191 இற்கான இந்த நட்டங்களில் 10 சதவீதத்தை மாத்திரம் உரிய தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட்டதன் நியாயத் தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பத்து ஆண்டுத் திட்டம் தயாரிப்பதற்காக வோட்டர்ஏஜ் மற்றும் திணைக்கள வளவில் நடாத்தப்பட்டிருந்த கருத்தரங்குகளுக்காக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 285,851 தொகை மற்றும் ரூபா 49,497 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஜூலை மாத இறுதி வரையும் அந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடமை நேரத்தில் சமூகமளித்திருந்த மூன்று திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ரூபா 7,200 வளபங்களிப்பு கொடுப்பனவு என செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மொழி வசதிகள் வழங்குனரின் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் குழாம் ஒன்று ஏற்படுத்துவதற்காக செயலமர்வுகள் நடாத்துவதற்காக ரூபா 28,600 தொகை மண்டப வசதிகள் பெறக்கூடியதாக இருந்தும், ரூபா 74,800 தொகை கூடிய பெறுமதிக்கான மண்டப வசதிகள் பெற்றிருந்த காரணத்தினால் திணைக்களம் ரூபா 46,200 தொகைக்கான மேலதிக கிரயமொன்று மேற்கொண்டிருந்தது.

(இ) லன்ஷ் ஷீட் (Lunch Sheet) பயன்படுத்துவது சுற்றாடலுக்கு அனுகூலமானதல்ல என இனங்கண்டிருந்ததினால் அந்த நிலைமையை குறைப்பதற்காக ரூபா 66,900 தொகை செலவிடப்பட்டு 124 திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு உணவுப் பெட்டிகள் கொள்வனவு செய்திருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது 11 உத்தியோகத்தர்கள் மாத்திரம் அப்பெட்டிகளை பயன்படுத்தியிருந்தமையால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.9 பொது மக்களுக்கு சேவை செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தகவல்கள் அறிந்து கொள்ளும் சட்டத்தின் பிரகாரம் பொது மக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டின் போது இரண்டு பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் ஒரு முறைப்பாட்டிற்கு பதில் அனுப்புவதற்கு 02 மாத காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரச கரும மொழிகள் திணைக்களத்திற்காக இணையத் தளம் ஒன்று வடிவமைத்தல் அதன் ஊடாக தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளும் நடைமுறை ஒன்று தயாரித்திருக்கவில்லை.

**2.10 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 84 | 63 | 21 | 25 |
| | மூலதன | 35 | 23 | 12 | 34 |
| | **மொத்தம்** | **119** | **86** | **33** | **28** |
| 2014 | மீண்டுவரும் | 72 | 71 | 01 | 01 |
| | மூலதன | 31 | 25 | 06 | 19 |
| | **மொத்தம்** | **103** | **96** | **07** | **07** |
| 2015 | மீண்டுவரும் | 97 | 91 | 06 | 06 |
| | மூலதன | 40 | 39 | 01 | 03 |
| | **மொத்தம்** | **137** | **130** | **07** | **05** |
| 2016 | மீண்டுவரும் | 101 | 95 | 06 | 06 |
| | மூலதன | 45 | 41 | 04 | 09 |
| | **மொத்தம்** | **146** | **136** | **10** | **07** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2017 | மீண்டுவரும் | 137 | 132 | 05 | 04 |
| | மூலதன | 36 | 21 | 15 | 42 |
| | **மொத்தம்** | **173** | **153** | **20** | **12** |

**ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருத்தல்**

07 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 0.869 இற்கான மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையால் அந்த செலவு விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 53.88 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தி இருந்தமையால் சேமிப்பு வழங்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வீச்சு அளவில் காணப்பட்டது.

**2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23601 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 7.5 | 7.47 | 4.0 | 4.39 | 25.0 | 21.3 |

**நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத் தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 74,116 தொகையாகக் காணப்பட்டதுடன் இந்த நிலுவை மீதி 05 வருடங்களை மிகைத்திருந்தது.

**2.12 பொது வைப்புக் கணக்கு**

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 4 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.61 மில்லியன் ஆகும். பொது வைப்புக் கணக்கு இலக்கம் 6000/0000/00/0018/0120 இன் கீழ் மீளாய்வாண்டு ஜூலை முதல் திசெம்பர் வரை அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 76,901 இற்கான தொகை குறிப்பிட்டுள்ளவாறு அந்த நிதியத்திற்க செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிக்கூற்றுக்கள் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை அடிக்கடி பரிசோதனை செய்யக்கூடிய விதமாக பொறுப்புக்கள் பதிவேடு ஒன்றில் அந்த பொறுப்புக்களை பதிவு செய்ய வேண்டும். |
| (ஆ) | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணங்கள் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் காணப்படும் படிவத்தின் படி சேதங்கள் தொடர்பான பதிவேடு |

## 2.14 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

2015 ஜுலை 14 திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணங்கள் 371(2)(இ) பந்தியின் பிரகாரம் முன்னர் வழங்கியிருந்த முற்பணம் ரூபா 32,480 தொகை தீர்த்திருக்காத போதும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 143,000 இற்கான முற்பணம் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது.

## 2.15 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கரும மொழிகள் திணைக்களம் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவி இருக்கவில்லை.

## 2.16 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கருமங்கள் மொழிகள் திணைக்களம் 2017 ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தியிருக்கவில்லை.

## 2.17 மனிதவள முகாமைத்துவம்

### 2.17.1 இணைக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேலே 2.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் பதவியணி மிகை மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான

திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 80.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் பதவியணி | மிகை பதவியணி |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 06 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 58 | 28 | 30 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 136 | 125 | 11 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 09 | 10 | - |
| (v) | அமைய/ ஒப்பந்த | - | 05 | - | 05 |
| | மொத்தம் | 224 | 173 | 56 | 05 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து சேர்த்தல்**

முறையான அங்கீகாரம் இன்றி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து அமைய மற்றும் ஒப்பந்த உத்தியோகத்தர்/ ஊழியர் 05 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) பதவியணி பயிற்சி வழங்கல்**

மீளாய்வாண்டின் போது பயிற்சி வழங்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை 166 என இனங்கண்டிருந்த போதிலும் 127 உத்தியோகத்தர்களை ஆண்டின் போது பயிற்சி ஏதுக்கும் தொடர்புபடுத்தி இருக்கவில்லை. 2017 ஆண்டின் போது பயிற்சி எதற்கும் 39 உத்தியோகத்தர்களில் 11 பேர் ஒரு நாள் பயிற்சி மாத்திரம் பெற்றிருந்தவர்களாக காணப்பட்டதுடன் பயிற்சிக்காக தொடர்புபடுத்த வேண்டிய உத்தியோகத்தர்களில் 23 சதவீதம் பயிற்சி வழங்குவதற்காக ரூபா 1,606,166 தொகை செலவாகியுள்ளது.

**2.18 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பணம் ஏற்றுக்கொள்ளும் மற்றும் பொறுப்பாக இருக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் களஞ்சியத்திற்கு பொறுப்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களினால் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்புச் செய்திருக்கவில்லை.